**செய்தி வெளியீடு எண்: 452** **நாள் : 15.09.2015**

**<u>செய்தி குறிப்பு</u>**

**2015–16**ம் கல்வியாண்டின் இரண்டாம் பருவத்திற்கான வகுப்புகள் அக்டோபர் முதல் வாரத்தில் துவங்கவுள்ளதை முன்னிட்டு **2015–16**ம் கல்வியாண்டிற்கான **1** முதல் **9** வகுப்புகளுக்கான இரண்டாம் பருவ இலவசப் பாடநூல்கள் அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு **14** செப்டம்பர் **2015** அன்று துவங்கி அடுத்த இரு வாரங்களில் முழுமையாக விநியோகம் செய்யப்பட உள்ளது. பாடநூல் விநியோகம் **01.10.2015**–க்குள் முடிக்கப்படும்.

தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களது தேவைக்கேற்ப தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் **22** வட்டார அலுவலகங்களிலிருந்து பள்ளிகள் இணையளதளம் மூலம் பதிவு செய்து, நேரடியாக பாடநூல்களை பெற்றிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. பள்ளிகளுக்கு விநியோகம் முடித்த பின்பு உரிமம் பெற்ற தனியார் கடைகளுக்கு அவர் தேவைப்பட்டியலின்படி சில்லறை விற்பனைக்கு பாடநூல்கள் வழங்கப்படும்.

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**